# இந்து ஒளி

## Hindu Oli



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீடு

**60 Years**

ALL CEYLON HINDU CONGRESS

DIAMOND JUBILEE COMMEMORATIVE ISSUE

**VOL 2**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
வைரவிழா மலர் வெளியீடு

# இந்து ஒளி

## Hindu Oli

## All Ceylon Hindu Congress

Diamond Jubilee Commemorative Issue

60

1955-2015



# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடும் அது சார்ந்த சடங்கு முறைகளும்



**பொன்னுத்துரை- பூலோகநாதன்**
(M.A,M.Phil Read,University of Peradeniya).
முன்னாள் உதவி விரிவுரையாளர், வருகை விரிவுரையாளர்
மெய்யியற்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரையானது ஈழத்தின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவும் கண்ணகி வழிபாடு பற்றியும் அவ்வழிபாட்டில் இடம்பெறும் சடங்கு முறைகளையும் சிறப்பாக ஆராய்வதாக அமைகிறது. இந்தியாவின் சோழ நாட்டிலே பிறந்து பாண்டி நாட்டிலே பாராளு மன்னனை தன் கணவனுக்காக பழிதீர்த்து சேர நாட்டிலே சேரன் செங்குட்டுவனால் பத்தினி என்று விழா எடுக்கப்பெற்ற கண்ணகி கடல்சூழ் இலங்கை நாட்டில் நிலைபெற்றிருப்பதை நாம் கண்ணகி வரலாறுகளில் காண்கிறோம். இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பே ஈழநாட்டில் வழிபடும் தெய்வமாகிவிட்ட கண்ணகி அம்மன் வழிபாடு வடக்கு, கிழக்கு மட்டுமன்றி பெரும்பான்மை இன மக்கள் வாழும் பிரதேசங்களிலும் வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்குகின்றது. அன்று தொட்டு இன்று வரை தமிழர் பிரதேசமெங்கும் வழிபடும் தெய்வமாக கண்ணகி போற்றப்பட்டாலும் ஈழத்தின் கிழக்குப் பகுதியிலே அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்திலேயே இவ்வழிபாடு இன்றும் சிறப்புற நடைபெறுகின்றது. இங்கு இவ்வழிபாடானது ஆகமம் சாராத முறையில்

பல்வேறுபட்ட சடங்கு முறைகளுடன் இடம்பெறுகிறது. குறிப்பாக கதவு திறத்தல், மண்ணெடுத்தல், நெற்குத்துச் சடங்கு, கல்யாணக்கால் வெட்டுதல், பணிமாறல், கொம்பு விளையாட்டு,பள்ளயம்,குளிர்த்தி, கதவடைப்பு என்றவாறான பல சடங்கு முறைகள் இன்றும் இப்பிரதேச கண்ணகி வழிபாட்டின் போது இடம் பெறுவதை காணக்கூடியதாகவுள்ளது. இங்கு இக்கட்டுரையானது இப்பிரதேசத்தில் இடம் பெறும் கண்ணகி வழிபாடு பற்றியும் அதுசார்ந்த சடங்கு முறைகளையும் விரிவாக ஆராய்வதாக அமைகின்றது.

### கண்ணகியின் பிறப்பு

பரராச முனிவரின் மகள் சிறந்த கற்புடை நங்கையாக விளங்கினாள். அவளது குணங்கள் கண்டு மகிழ்ந்த சிவபிரான் பூலோகத்தோர் போற்றும் தெய்வமாக பிறக்க வரம் கொடுத்தார். அக்காலப்பகுதியில் பாண்டிய மன்னன் தனது தவப்பேற்றால் சிவனைப் போன்று நெற்றிக் கண்ணை உடையவனாக பெரும் செருக்குடன் விளங்கினான். இவனது செருக்கை போக்குவதற்கு பரராச முனிவரது மகள் பூமியில் பிறக்க வேண்டிய நியதி ஏற்பட்டது. அப்போது பாண்டி நாட்டிலே புதுமை வாய்ந்த மாங்கனி ஒன்று ஓரிடத்தில் காணப்பட்டது. அதனை பறிக்க பலர் முயன்றும் அது யாரினதும் கைகளில் அகப்படாமல் இருந்தது. அதனை பாண்டிய மன்னன் தனது அம்பினால் எய்து நிலத்தில் விழாது தனது கைகளினால் ஏந்திப்பிடித்தான். அப்போது அம்மாங்கனி நெருப்புருண்டையாகியது. மன்னர் பயத்தினால் வியர்த்து அம்மாங்கனியை நிலத்தில் விட்டு தன் கையினால் நெற்றி வியர்வையை துடைத்தபோது நெற்றிக் கண் நீங்கியது. இக் கனியால் தன் அகந்தையின் கண் அழிந்தமையால் மன்னன் பெரிதும் கவலையடைந்தான். நிலத்தில் விழுந்த கனி ஓர் உருண்டையாகியது. அதனை மன்னன் தனது மனைவியிடம் கொடுத்தபோது அவள் அத் தெய்வ கனியை ஒரு பொற்குடத்துள் இட்டாள். மூன்றாம் நாள் அது அழகிய பெண் குழந்தையாக தோற்றமளித்தது. தோற்றத்தைப் பார்த்து மன்னன் சோதிடர்களின் அறிவுரையின்படி ஒரு பேழையில் வைத்து கடலில் இட்டான். அக்காலத்திலே சோழ நாட்டிலே காவிரிப்பூப்பட்டினத்தில் மாசாத்துவான், மாநாய்கன் எனும் இரு பெரும் வணிகர்கள் இருந்தனர். மாசாத்துவானுக்கு கோவலன் எனும் மகனும், மற்றயவருக்கு பிள்ளைப்பேறு இல்லை. மைத்துணர்களான இருவரும் மைத்துணர்களை இருவரும் ஒரு நாள் கடற்கரையில் நின்றபோது பேழையைக் கண்டு மாநாய்கன் குழந்தையை எடுத்து கண்ணகி எனும் பெயர் சூட்டி தன் குழந்தை போன்று வளர்த்து பருவமடைந்ததும் கோவலனுக்கு மணப் பெண்ணாக குறித்தனர். தனது மகளுக்கு விலையுயர்ந்த அணிகலன்களை செய்ய விரும்பிய மாநாய்கன் கண்ணகியின் காற்சிலம்புக்காக மற்றயவர்களைப் போலன்று நாகமணிகளை இட வேண்டும் எனக் கருதி பல இன்னல்களுக்கு மத்தியில் மீகாமன் என்பவனின் துணை கொண்டு அதைப்பெற்று கண்ணகியின் பொற்பாதங்களை அலங்கரித்தான்.

இது இவ்வாறிருக்க தேவலோகத்தில் ஊர்வசியின் நடனம் இடம் பெற்றது. அங்கு நாரதர் வீணை வாசித்தபோது ஊர்வசி நாரதரின் வாத்திய தாளங்களுக்கு பிழைபட ஆடினாள். அப்போது நாரதர் இட்ட சாபத்தின் பயனாக ஊர்வசி பூலோகத்தில் சித்திராபதியின் மகளாக மாதவி எனும் பெயருடன் காவரிப்பூம்பட்டினத்தில் ஆடல்பாடல்களில் வல்லவளாக பிறந்தாள். ஒரு நாள் மாதவியின் நடன அரங்கேற்றம் கரிகால்வளவ மன்னன் சபையில் நடந்தபோது மன்னன் ஒரு பொன் மாலையை அவளுக்கு கொடுத்து பாராட்டினான். அதுமட்டுமன்றி மாதவியை மணம் செய்வோர் 1008 கழஞ்சு பொன் கொடுத்து அதை வாங்குவதோடு தினமும் அவ்வளவு பொன் அவளுக்கு கொடுக்க வேண்டும் என நியதி செய்தான். இதற்கிணங்க கோவலனும் அவளுடன் வாழலானான்.

இரண்டாண்டுகளில் கோவலனின் கடல்வணிகம் சுருங்கி மாதவிக்கு பொன்கொடுப்பதில் பிரச்சினை ஏற்பட்டு அவளிடமிருந்து பிரிந்து கண்ணகியின்பால் செல்லலானான். அப்போது இருவரும் மதுரையை அடைந்து அங்கு கண்ணகியின் காற்சிலம்பை விற்க சென்றபோது மன்னது மனைவியின் காற்சிலம்பை திருடிய பொற்கொல்லன் ஒருவனாற் கள்வனென்று குற்றம் சாட்டப்பட்டு கோவலன் கொலையுண்டான். கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி "தன் கணவன் கள்வன் அல்ல" என்று அனல் கக்குமாறு பாண்டியனோடு வழக்குரைத்து வென்றாள். இது கண்ட பாண்டிய மன்னனும் அவனது மனைவியும் வீழ்ந்து உயிர் மாண்டனர். கண்ணகியோ சிறிதும் சீற்றம் தணியாதவளாய் தன் ஒரு முலையை திருகி எறிந்து மதுரையை எரித்தாள். அப்போது மதுரையின் இடைச்சேரிக்கு வந்த கண்ணகியை இடையர் குல பெண்கள் கூடிநின்று நெய், பால், தயிர் செய்து முழுக்காட்டி குளிர்வித்தனர். பத்தினித்தெய்வம் இவள் என்று யாவரும் போற்றுவராயினர். கண்ணகி தேவியும் உளம் குளிர்ந்து மதுரை தழைக்க வரங் கொடுத்தாள். மக்கள் குலம் அவளை தெய்வம் என பரவி வாழ்வு பெறலாயிற்று என கண்ணகி வழக்குரை கண்ணகியை போற்றி நிற்கிறது.

### ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம்.

பத்தினித் தெய்வமாக போற்றப்பட்ட கண்ணகிக்கு